DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 250/2023 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.2 /PW.2 |
| Name | லெட்சுமி |
| Father's/Husband's Name | பாலகிருஸ்ணன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. 317 crpc petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 30.04.2025 at **10**.55 a.m

**முதல் விசாரணை:**

நான் மதுரையில் வசிக்கிறேன். நவம்பர் 23ம் தேதி 2023ம் வருடம் எனது கணவர் பாலகிருஸ்ணன் மோடி திட்டத்தில் பதிவு செய்வதற்காக எங்களது சொந்த ஊரான வேலாநேரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு மானாமதுரை ஆனந்தவள்ளிஅம்மன் கோவில் அருகில் அருவாள் பட்டறையில் கரும்பு சீவுவதற்கு அருவாள் அடிப்பதற்காக சென்றுள்ளார். அவர்கள் அம்மாவாசை என்பதால் அருவாள் அடிக்கமாட்டேன் என்று கூறிவிட்டார்கள். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் இரயில்வே கேட்டை தாண்டிய போது எனது கணவரின் அக்காமகன் செல்லக்கண்ணன் இருசக்கர வாகனத்தில் வந்து எனது கணவரை மிதித்து தள்ளியுள்ளார். எனது கணவர் டாடா ஏசியில் மோதியவுடன் விழுந்து விட்டார். எனக்கு ஒரு நபர் போன் செய்து எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றுவிட்டதாக கூறினார். நானும் எனது மகனும் சிவகங்கை அரசு

மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கிருந்து எனது கணவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது கணவருக்கு காலில் நரம்பு துண்டிக்கப்பட்டுவிட்டதால் காலை எடுக்கவேண்டும் என்று மருத்துவமனையில் கூறினார்கள். அதன்பிறகு எனது கணவரை மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். மேற்படி விபரம் எனது கணவர் சொல்லி எனக்கு தெரியும். எனது கணவரை நான் பார்த்த போது அவருக்கு தலை மற்றும் காலில் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை